# தமிழ்நாட்டின் பாரம்பரிய நெல் இரகங்கள்







வேளாண்மை அறிவியல் நிலையம், திருவள்ளூர்

# தொழில்நுட்ப குழு

முனைவர். சி.பானுமதி, திட்ட ஒருங்கிணைப்பாளர்

முனைவர். இரா. அகிலா

முனைவர். வி.அ. விஜயசாந்தி

முனைவர். க.சிவகாமி

முனைவர். கோ.குமரேசன்

முனைவர். செ.தமிழ்செல்வி

முனைவர். அ.புனிதா

திரு. துரை நக்கீரன்

முனைவர்.பி.பொ.முருகன், விரிவாக்க கல்வி இயக்குநர்

முனைவர். ஷேக்.என். மீரா. இயக்குநர் (தொ.நு.ப.நி.)



வேளாண்மை அறிவியல் நிலையம், திருவள்ளூர்

# பாரம்பரிய நெல் இரகங்கள்

முன்னுரை

இந்தியாவில் இரண்டு லட்சத்திற்கும் மேலான நெல் இரகங்கள் இருந்தன. உயர் விளைச்சல் தரும் நவீன நெல் இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் பாரம்பரிய நெல் இரகங்கள் சாகுபடி பரப்புளவு குறைந்தது. பாரம்பரிய நெல் இரகங்களில் பூச்சி, நோய், வறட்சி, களர், உவர் தன்மை தாங்கும் திறன் இருப்பதுடன் உடல் நலத்தைக் காக்கும் மருத்துவ குணங்கள் அதிகம் காணப்படுகின்றன. மேலும் வைக்கோல் அதிக ஊட்டச்சத்துடன் இருப்பதால் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க தீவனமாக பயன்படுகிறது. தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட பாரம்பரிய இரகங்கள் பயிரிடப்பட்டு வந்துள்ளது. அவற்றுள் சிலவற்றின் பண்புகள் பற்றி இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

1. புழுதிக்கார்



- ஈரோடு மாவட்டம் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மானாவாரி புஞ்சை நிலங்களில் நேரடி விதைப்பில் பயிரிடப்படுகின்றது.
- வயது 125-130 நாட்கள், உயரம் 130 செ.மீ
- பருமனான சிவப்பு நிற அரிசியுடையது.

2.கல்லுருண்டைகார்



- நாகப்பட்டினம் மாவட்டத்தில்பின் சம்பா மற்றும் நவரைப்பருவங்களுக்கு ஏற்றது.
- களிமண் நிலங்களில் நன்றாக வளரக்கூடியது.
- நேரடி நெல் விதைப்பிற்கு ஏற்றது.
- வயது 120 நாட்கள்; உயரம்120 செ.மீ
- வறட்சி, பூச்சி, நோய் மற்றும் களர், உவர் தன்மை தாங்கி வளரக்கூடியது.
- பருமனான பழுப்பு நிறத்தில் வெளிர் கோடுகளை உடைய நெல், மஞ்சள் நிற அரிசியுடையது.
- வைக்கோல் மிகவும் உறுதியானது, கூரை வேய்வதற்கு உகந்தது.

3.சூரக் குருவை

- நாகை மாவட்டத்தில் செம்போடை, பெரிய குத்தகை, தோப்புத்துறை ஆகிய கடலோர கிராமங்களில் பின் சம்பா மற்றும் குறுவை பருவங்களில் பயிரிடப்படுகின்றது.
- களிமண்பாங்கான மற்றும் கடலோர களர் உவர் நிலங்களிலும் மானாவாரி மற்றும் பாசனப் பகுதிகளிலும் பயிரிடப்படுகின்றது
- வயது 130 -140 நாட்கள்; உயரம் 110-120 செ.மீ
- பருமனான பழுப்பு நிற அரிசியுடையது.



4.குழியடிச்சான்

- நாகை மாவட்டத்தில் வெள்ளப்பாலம் மற்றும் கீழ்வேளூர் பகுதிகளில் பின் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- மணல் கலந்த களிமண், களர், உவர் நிலம் மற்றும் கடலோரப்பகுதிகளில் பயிரிட ஏற்றது.
- வறட்சி, களர் உவர் தன்மை, பூச்சி மற்றும் நோய் தாங்கி வளரக்கூடியது.
- வயது 110 நாட்கள்.
- பருமனான பழுப்பு நிற அரிசியுடையது.
- வெள்ள பாதிப்பினால் சாய்ந்த பயிரிலிருந்தும் புதிய தூர்கள் கட்டக்கூடியது.
- பாலூட்டும் தாய்மார்களுக்கு பால் சுரப்பை அதிகரிக்கும் தன்மை வாய்ந்தது.



5.வால் சிவப்பு

- நாகை மாவட்டத்தில் வெள்ளப்பாலம் மற்றும் கீழ்வேளூர் பகுதிகளில் பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- மணல் கலந்த களிமண், களர் உவர் நிலம்மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 145 -150 நாட்கள்; உயரம் 160 செ.மீ

சுவையான சிவப்பு நிற அரிசியுடையது

- நெல்மணிகள் சிறிய பறவையின் வால் போல் தோற்றமளிக்கும்.



6.வெள்ளைக் குருவிக்கார்



- நாகை மாவட்டத்தில் வெள்ளப்பாலம் மற்றும் கீழ்வேளூர் பகுதிகளில் சம்பா மற்றும் பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- மணல் கலந்த களிமண், களர் உவர் நிலங்களில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 125 -135 நாட்கள; உயரம் 100 - 120செ.மீ
- நேரடி புழுதிக்கால் விதைப்பிற்கு ஏற்றது.
- மங்கலான வெள்ளை முதல் வெளிர் மஞ்சள் நிற அரிசியுடையது.

7.சீரகச்சம்பா



- நாகை மாவட்டத்தில் வெள்ளப்பாலம் மற்றும் கீழ்வேளூர் பகுதிகளில் சம்பா மற்றும் பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- மணல் கலந்த களிமண், களர் உவர் நிலங்களில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 125 -130 நாட்கள், உயரம் 100-110செ.மீ.
- மிகவும் சிறியமற்றும் சன்ன இரக அரிசியுடையது
- பிரியாணி சமையலுக்குமிகவும் ஏற்றது.

8.சூரக் குறுவை



- நாகை மாவட்டத்தில் வெள்ளப்பாலம் மற்றும் கீழ்வேளூர் பகுதிகளில் சம்பா மற்றும் பின் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றுத.
- வயது 130-135 நாட்கள்
- அடர் பழுப்பு நிறமுடைய பருமனான அரிசியுடையது.

9.வைகுண்டா



- நாகை மாவட்டத்தில் வெள்ளப்பாலம் மற்றும் கீழ்வேளூர் பகுதிகளில் தாளடி பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- வெள்ளம் மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 145-150 நாட்கள்

10. கிச்சடி சம்பா/ கிச்சலி சம்பா



- நாகை மாவட்டத்தில் கீழ்வேளூர் பகுதிகளில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- பூச்சி மற்றும் நோய் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 140 நாட்கள்
- வெளிர் வெள்ளை நிற அரிசியுடையது.

11.சின்ன சம்பா / சாதா சம்பா



- நாகை மாவட்டத்தில் கீழ்வேளூர் பகுதிகளில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- பூச்சி மற்றும் நோய் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 140 நாட்கள.
- வெளிர் மஞ்சள் நிற அரிசியுடையது.

12.குதிரைவால் சம்பா



- திருச்சி மாவட்டம் கம்பளத்துப்பட்டி கிராமத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- வயது 140- 145 நாட்கள்.
- சாயாத தன்மையுடையது. பூச்சி மற்றும் நோய் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடியது
- வெள்ளை நிற அரிசியுடையது.

13.கள்ளிமடையான்



- பெரம்பலூர் மாவட்டம் ஐயர்பாளையம் பகுதிகளில் பயிரிடப்படுகின்றது.
- வயது 180 நாட்கள் ;உயரம் 110-120 செ.மீ
- அதிக தூர்கள் பிடிக்கும் தன்மை மற்றும் கதிரின் நீளம் 30 செ.மீ வரக்கூடியது.பருமனான வெள்ளை நிற அரிசியுடையது.
- குருத்துப்பூச்சி, கதிர்நாவாய் பூச்சி மற்றும் இலைக்கருகல் நோய் தாங்கி வளரக்கூடியது.

14.கருப்புக்கவுனி



- சிவகங்கை மாவட்டம் அனுமந்தக்குடி பகுதிகளில் சம்பா மற்றும் பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- வயது 150-170 நாட்கள் ; நேரடி விதைப்பிற்கு ஏற்றது.
- அதிக தூர்கள் கட்டும் திறன் வாய்ந்தது. கருப்பு நிற அரிசியுடையது.
- மிகக் குறைந்த பாசன நீர் போதுமானது.
- செம்மண் மற்றும் களிமண் நிலங்களில் புழுதிக்கால் விதைப்பிற்கு ஏற்றது.
- தேங்காய் பால் கலந்த சர்க்கரைப் பொங்கல் செய்ய பயன்படுகிறது.
- நீரிழிவு நோயாளிகள் உட்கொள்ள ஏற்றது.

15.சண்டிக்கார்




- சிவகங்கை மாவட்டம் அனுமந்தக்குடி பகுதிகளில் பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- அதிக உயரம் வளரும் தன்மை உடையதால் நட்ட மூன்றாம் மாதத்தில் தாள்கள் அறுத்து விடப்படுகின்றது.
- செம்மண் மற்றும் களிமண் கலந்த உவர் நிலங்களுக்கு ஏற்றது.
- வறட்சி மற்றும் இலைக்கருகல் நோய் எதிர்ப்புத்திறன் உடையது.

16.வரப்புக்குடைஞ்சான்

- இராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி பகுதிகளில் பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- மானாவாரி பகுதிகளில் வறட்சியைத் தாங்கி உயரமாக (150-160 செ.மீ) வளரக்கூடியது.
- வயது 90-100 நாட்கள்.
- கருப்பு நிற நெல்மற்றும் சிவப்பு நிற அரிசியுடையது.
- அதிக வைக்கோல் தரக்கூடியது.
- சன்ன இரக அரிசியை விட அதிக சத்து மற்றும் சக்தியைக் கொடுக்கக்கூடியது.



17.குழிபறிச்சான் / குழியடிச்சான்

- இராமநாதபுரம் மாவட்டம் பல்லவச்சேரி பகுதிகளில் பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- கடலோர மணற்பாங்கான பகுதிகளில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 90-100 நாட்கள்
- அடர் பழுப்பு நிற நெல் மற்றும் பருமனான சிவப்பு நிற அரிசியுடையது.
- சமைத்த சாதம் நீண்ட நேரம் கெடாமல் இருக்கும்.



18.சித்திரைக்கார்

- இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி பகுதிகளில் மட்டை நெல்என்ற பெயரில் பின்சம்பா பருவத்தில் பயிரிடுவர்.
- கடலோர மணல் பகுதிகளில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 110 நாட்கள்
- வெளிர் பழுப்பு நிற நெல், பருமனான சிவப்பு நிற அரிசியுடையது.



19. சிவப்புச்சித்திரைக்கார்



- இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பகுதிகளில்பின்சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்படுகிறது.
- வயது 110 நாட்கள்; வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- கருப்பு நிற நெல் மற்றும் சிவப்பு நிற அரிசி உடையது.
- அரிசிக்கஞ்சி மிகவும் சுவை மிகுந்தது.

20. முருங்கன்கார்




- இராமநாதபுரம் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் குறைந்த மழை தரும் நாட்களில் பயிரிட ஏற்றது.
- வறட்சியைத் தாங்கி மானாவாரியில் வளரக்கூடியது.
- ஏக்கருக்கு 1000-1300 கிலோ மகசூல் தரக்கூடியது.

21. நூற்றிப்பத்து



- இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றக்கரையோரத்தில் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்படுகிறது.
- களிமண் பாங்கான பகுதிகளில் மானாவாரியில் வறட்சியைத் தாங்கி உயரமாக வளரக்கூடியது.
- வைக்கோல் நிற நெல் மற்றும் சிவப்பு நிற அரிசியுடையது.அரிசிக்கஞ்சி சுவையுடையதாக இருக்கும்.

22. ஆரியான்



- நான்கு வகையான, வெள்ளை ஆரியான், கருப்பு ஆரியான், சிவப்பு ஆரியான் மற்றும் வாழை ஆரியான் இராமநாதபுரம் மாவட்ட பகுதிகளில் கடலோர மணற்பாங்கான நிலங்களில் தாளடியில் பயிரிடப்படுகிறது.
- வயது 120 நாட்கள் ; மிக அதிகமான உயரம் 180-200 செ.மீ வளரக்கூடியது. நீண்ட வால் உடைய நெல், வறட்சியைத் தாங்கி உயரமாக வளரக்கூடியதுமூன்று நிலைகளில் மேற்பாகம், இடைப்பாகம் மற்றும் அடிப்பாகம் தனித்தனியாக அறுவடை செய்யப்படும்.

23.சடைகார்

- இராமநாதபுரம் மாவட்டம் ஆக்கடைவலசல் கிராமத்தில்பின்சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 110 -120 நாட்கள்
- மருத்துவ குணம் வாய்ந்தது.
- கால்நடைகளுக்கு வெட்டுக்காயங்களை குணப்படுத்த வடித்த சாதம் மேல் பூச்சாக பயன்படுத்தப்படுகிறது.
- ஓரளவு மழைநீர் பிடிப்பு இடங்களிலும் மணற்பாங்கானஇடங்களிலும் பயிரிடப்படுகிறது.
- பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.




24. குறுவைக்களஞ்சியம்

- இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆவணி பட்டத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 110 நாட்கள்
- அதிக வைக்கோல் தரக்கூடியது.
- சிவப்பு நிற அரிசியுடையது.
- வடித்த சாதம் இரண்டு நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.
- அரிசிக்கஞ்சி சுவையுடையதாக இருக்கும்.



25. நொறுங்கன்



- இராமநாதபுரம் மாவட்டத்தில், ஐப்பசிப் பட்டத்தில் மானாவாரி பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- வயது 110 நாட்கள். சிவப்பு நிற அரிசியுடையது.
- குருத்துப்பூச்சி மற்றும் இலைசுருட்டுபுழு தாக்குதலுக்கு எதிர்ப்பு திறன் கொண்டது. வறட்சியைத் தாங்கி உயரமாக வளரக்கூடியது.

26.கல்லுருண்டைக்கார்



- இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- வறட்சியைத் தாங்கி வளரும் உயரமான இரகமாகும்.
- இதனைச் சுற்றி வரப்பு பயிராக வெள்ளை, சிவப்பு மற்றும் கருப்பு சோளம் வளர்க்கப்படுகிறது.

27.தங்கச்சம்பா



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சம்பா மற்றும் பின் சம்பா பருவங்களில் பயிரிடப்படுகிறது.
- வயது 160 -165 நாட்கள்.
- தங்க நிற நீள சன்ன அரிசி. நீளமான கதிர்.
- புலாவ் உணவு வகை செய்ய ஏற்றதாகும்.

28.நீலன் சம்பா



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 175-180 நாட்கள.
- பருமனான சிவப்பு நிற அரிசி.
- தண்ணீர் தேங்கும் பகுதிகளுக்கு ஏற்றது
- புகையான் மற்றும் கதிர் நாவாய் பூச்சியின் தாக்குதலுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.
- பாலூட்டும் தாய்மார்களுக்கு ஏற்ற இரகம்.

29.வாடன் சம்பா



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 155-165 நாட்கள்
- நேரடி விதைப்பு மற்றும் நடவு முறையில் பயிரிடப்படுகிறது. வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- மங்கிய வெள்ளை நிறமுடைய பருமனான அரிசியுடையது.
- பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.
- இதில் நெல்மணிகள் சிதறுவதை தவிர்க்க பச்சையாக இருக்கும் போதே அறுவடை செய்திட வேண்டும்.

30.கலியன் சம்பா



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 150-160 நாட்கள் ;உயரம் 150-160 செ.மீ.
- நடவு முறையில் பயிரிடப்படுகிறது.
- தாழ்வான மற்றும் தண்ணீர் தேங்கும் பகுதிகளுக்கு ஏற்றது.
- பூச்சி மற்றும் நோய் தாக்குதலை தாங்கி வளரக்கூடியது.
- சிவப்பு நிற அரிசியுடையது.

31. சம்பா மோசனம்



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- புழுதிக்கால் மற்றும் நடவு முறையில் பயிரிடப்படுகிறது. பருமனான சிவப்பு நிற அரிசி.
- புழுதிக்கால், ஏரிநெல், மடுவுமுழுங்கி எனவும் வழங்கப்படுகிறது.
- ஏரி பக்கத்தில் நடவு செய்ய ஏற்றதாகும்.
- இட்லி, தோசை மற்றும் அவல் செய்வதற்கு ஏற்றதாகும்.

32. காடைக் கழுத்தன்



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- நாற்று நடவு முறையில் பயிரிடப்படுகிறது.
- வயது 150-165 நாட்கள
- சன்ன இரக வெள்ளை அரிசி, கருடன் சம்பா என்றும் அழைக்கப்படுகிறது.
- நெல்லில் வெள்ளை வளையம் போல் நிறம் உள்ளதால் இப்பெயர் பெற்றுள்ளது.
- நல்ல வடிகால் வசதி உள்ள இடங்களுக்கு ஏற்றதாகும்.
- புட்டு செய்ய ஏற்ற இரகமாகும்.

33. பிசினி

- திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாரம்பரிய நெல் இரகம்.
- வடித்த சாதம் பசை போன்ற பிசுபிசுப்புத்தன்மை உடையதால் பிசினி என்றழைக்கப்படுகின்றது.
- வயது 120 நாட்கள்.
- பருமனான சிவப்பு நிறஅரிசியுடையது.
- கஞ்சி, அவல், தோசை செய்ய ஏற்றதாகும்.
- வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.



34. கருப்பு சீரகச்சம்பா

- வயது 140 நாட்கள், உயரம் 95 செ.மீ.
- நெல் கருப்பு நிறத்தில் இருக்கும்.
- சீரகத்தை ஒத்த அளவு மற்றும் வடிவம் கொண்டிருக்கும்.
- சம்பா பருவத்திற்கு ஏற்றது.



35.சேலம் சம்பா

- சேலத்தைச் சேர்ந்த வெள்ளை அரிசியையுடைய சன்ன இரகம்.
- நல்ல வாசனையுடையது.
- சர்க்கரைப் பொங்கல் செய்ய ஏற்றது.
- சம்பா பருவத்தில் சாகுபடி செய்ய ஏற்றது.
- வயது -140 நாட்கள் ; உயரம் -70 செ.மீ



36.சோளக் குறுவை

- வயது -120 நாட்கள், உயரம் 70 செ.மீ.
- சம்பா பருவம்
- மெல்லியதான சிவப்பு நிற அரிசியுடையது.



37. வெள்ளைப் பூங்கார்

- குறுவை பருவத்தில் சாகுபடி செய்ய ஏற்றது
- களிமண், மணல் கலந்த களிமண் நிலங்களில் நன்கு வளரும்.
- வயது -150 நாட்கள்; உயரம் -125 செ.மீ
- பருமனான வெள்ளை நிற அரிசியுடையது.



38. கட்ட சம்பா



- கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தது.
- வெள்ள பெருக்கு ஏற்படும் இடங்களுக்கு உகந்தது.
- 180 நாட்களில் முதிர்வடையும் நீண்ட கால இரகம்
- உயரம் 115 செ.மீ.
- சம்பா பருவத்திற்கு ஏற்றது.

39. காட்டுயாணம்



- மிக உயரமான இரகம், காட்டுயானையைக் கூட மறைக்கும் அளவு உயரம் வளர்வதால் இப்பெயர் பெற்றது. சம்பா பருவத்திற்கு ஏற்றது.
- நிறைய மருத்துவ குணங்கள் கொண்டது. சர்க்கரை நோய், புற்றுநோய் மற்றும் இருதய நோய்களை குணப்படுத்த உதவும்.
- மண்வளத்தை பாதுகாக்கவும், நீர் பிடிப்புத்தன்மையை மேம்படுத்தவும் செய்கின்றது.
- வெள்ளத்தை தாங்கும் திறன் வாய்ந்தது
- வைக்கோல் கூரை வேய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.
- அவல் பாயசம், கஞ்சி செய்வதற்கும், இட்லி, தோசை, இடியாப்பம் போன்ற பலகார வகைகளுக்கும் ஏற்றது.
- வயது 180 நாட்கள், உயரம் - 195 செ.மீ.
- பருமனான வெளிர் சிவப்பு நிற அரிசியுடையது.

40. ஆற்காடு கிச்சலி



- ஆற்காடு மாவட்டத்தில் சம்பா மற்றும் நவரைப்பருவங்களில் சாகுபடி செய்யப்பபடுகிறது.
- நெல்மணிகள் கிச்சிலி பழத்தைப் போல் தோன்றுவதால் இப்பெயர் பெற்றது.
- வயது 140-145 நாட்கள், உயரம் - 75 செ.மீ.
- வெள்ளை நிற அரிசியுடையது.
- பாலூட்டும் தாய்மார்களுக்கு பால் சுரப்பை அதிகரிக்கிறது.
- கால்நடைகளில் நோய் எதிர்ப்புச்சக்தியை மேம்படுத்தவும் பால் வளத்தை பெருக்கவும் உதவுகின்றது.

41. செம்பாளை



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் எடையூர் கிராமத்தில் பயிரிடப்படுகிறது.
- சம்பா பருவத்திற்குகேற்ற பூச்சி மற்றும் நோய் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடிய இரகம்.
- நேரடி விதைப்பு மற்றும் நாற்று நடவுக்கு ஏற்றது.
- தென்மாவட்டங்களில் செய்யப்படும் உணவு வகைகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. பொரி செய்ய ஏற்றது.
- வயது 100-105 நாட்கள்; உயரம் -116 செ.மீ.
- மங்கிய வெள்ளை நிற பருமனான அரிசி.

42.கடலூர் சீரக சம்பா



- கடலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படும் சன்னமான வெள்ளை நிறமுடைய வாசனை அரிசி இரகமாகும்.
- குளிமண் மற்றும் மணல் கலந்த களிமண் நிலங்களுக்கு ஏற்றது.
- வயது 150 நாட்கள்; உயரம் 125 செ.மீ

43.கல்லுண்டை



- கடலோரமாவட்டங்களில் மணற்பாங்கானநிலங்களுக்கும் மற்றும் மணல் கலந்த களிமண் நிலங்களுக்கும் ஏற்றது.
- இட்லி, தோசை போன்ற உணவு வகைகளுக்கு உகந்தது. வயது 110 நாட்கள் ; உயரம் 120 செ.மீ பருமனான பழுப்பு நிற அரிசி.


44.காட்டுக் குத்தாலம்

- சம்பா மற்றும் பின்சம்பா பருவங்களுக்கு ஏற்ற குறுகிய கால இரகம்.
- வயது 120-125 நாட்கள் ; உயரம் 125 செ.மீ
- மணல் கலந்த களிமண் பகுதிகளிலும் நல்ல வடிகால் வசதி உள்ள நிலங்களிலும் நன்கு வளரும் ஆற்றல் வாய்ந்தது



- அதிக எடையுடைய பருமனான சிவப்பு நிற அரிசி
- இட்லி, தோசை, புட்டு உணவு செய்வதற்கும் ஏற்றது.

45.ரசகடம்



- மலைப்பிரதேசங்களில் வளரும் நவரை பருவத்திற்கு ஏற்ற இரகம்
- மணல் கலந்த களிமண், வண்டல் மண் நிலங்களில் நன்கு வளரும்
- சிறிய உருண்டையான நெல் மணிகளை உடையது.
- வயது 125 நாட்கள்; உயரம் 125 செ.மீ
- வெள்ளை நிற சன்னமான அரிசி
- தென்னிந்திய பராம்பரிய உணவு வகைகளுக்கு மிகவும் ஏற்றது.

46.மாப்பிள்ளை சம்பா


- நாட்டுபுறங்களில்இந்த அரிசி இளைஞர்கள் மற்றும் புது மாப்பிள்ளைகளுக்கு கொடுப்பதால் இப்பெயர் பெற்றது. அதிக வலிமை மற்றும் உடல் எடை கொடுக்கக்கூடியது.
- மருத்துவ குணங்கள் அதிகம் உடையது, வாய்ப்புண் மற்றும் வயிற்றுப்புண்ணை ஆற்றும். செரிமானத்தை அதிகரிக்கும், சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்றது.



- ஆராய்ச்சிகளில் இந்த அரிசியில் அதிக மாவுச் சத்து, அதிக ஆற்றல் மற்றும் நார்ச்சத்துஇருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.
- குளிமண், மணல் கலந்த களிமண் நிலங்களுக்கு உகந்தது.
- சம்பா மற்றும் பின் சம்பா பருவத்திற்கு ஏற்றது.
- வயது 160 நாட்கள் ; உயரம் 120 செ.மீ.
- பருமனான சாம்பல் / சிவப்பு நிற அரிசியுடையது.

47. அறுபதாம் கோடை

- எல்லா பருவங்களிலும் நன்கு வளரக்கூடியது, இருப்பினும் நவரைப்பருவத்திற்கு மிகவும் ஏற்றது.



- களி, மணல் கலந்த களிமண் மற்றும் களர்- உவர் நிலங்களிலும் வளரும்.
- வயது 65-70 நாட்கள் ; உயரம் 75 செ.மீ.
- பருமனான சிவப்பு நிற அரிசியுடையது.
- உடலுக்கு அதிக சக்தி மற்றும் ஆரோக்கியத்தைத் தரவல்லது.
- கர்ப்பமான பெண்கள் தினமும் கஞ்சியாக உட்கொண்டால் அதிக சக்தியை அளித்து

எளிதான பிரசவத்திற்கு உதவி செய்கின்றது

- அதிக துத்தநாக சத்து உள்ளது.
- களர்- உவர் தன்மை, வறட்சி மற்றும் வெள்ளத்தையும் தாங்கி வளரக்கூடியது.

48.தூய மல்லி



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 135-140 நாட்கள்.
- நேரடி விதைப்பு மற்றும் நாற்று நடவுக்கு ஏற்றது.
- வெள்ளை அரிசி கொண்ட சன்ன இரகம்.
- பூக்கும் தருணத்தில் கதிர்கள் பூக்களைக் போன்றே இருக்கும்.
- பூச்சி மற்றும் நோய் தாக்குதலை தாங்கி வளரக்கூடியது.

49.களர்பாளை



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் சம்பா பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 120 நாட்கள் ; நவரைப் பருவத்திற்கு ஏற்றது.
- நாற்று நடவுக்கு ஏற்றது.
- பருமனான பழுப்பு நிறமுடைய அரிசியுடையது
- பூச்சி மற்றும் நோய் தாக்குதலை தாங்கி வளரக்கூடியது.
- களர் நிலத்திற்கு உகந்த இரகமாகும்.

50.முட்டக்கார்



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் எடையூர் கிராமத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 120 நாட்கள; நவரைப் பருவத்திற்கு ஏற்றது.
- நாற்று நடவுக்கு ஏற்றது.
- உயரம் 135 செ.மீ வரை வளரக்கூடியது.
- சாயும் தன்மையுடையது.
- பருமனான சிவப்பு நிற அரிசி

51.கப்பக்கார்



- திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தகண்டாபுரம் கிராமத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 150-160 நாட்கள் ; சம்பா பருவத்திற்கு ஏற்றது.
- விதையளவு 50 கிலோ/ஏக்கர்.
- நேரடி விதைப்பு மற்றும் நாற்று நடவுக்கு ஏற்றது.
- பழுப்பு நிறமுடைய அரிசியுடையது.
- இட்லி, தோசை உணவு செய்ய ஏற்றது.
- களிமண் பகுதிக்கு ஏற்றது.

52.பெருங்கார்



- திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தகண்டாபுரம் கிராமத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 120 நாட்கள் ; சம்பா பருவத்திற்கு ஏற்றது
- நேரடி விதைப்பிற்கு ஏற்றது.விதையளவு 35கிலோ/ஏக்கர்
- விதையளவு 40 கிலோ/ஏக்கர்- நாற்று நடவு
- 135 செ.மீ உயரம் வளரக்கூடியது.
- இட்லி, தோசை போன்ற உணவு வகைகளுக்கு ஏற்றது.
- குருத்துப்பூச்சிமற்றும் கதிர்நாவாய்ப்பூச்சியை தாங்கி வளரக்கூடியது.

53.காலாநமக்



- காலாநமக் இரகமானது வாசைனயுடன் கூடிய மிக சன்ன இரகமாகும்.
- இது உத்திரப்பிரதேசத்தின் கிழக்கு இமாலய மலைத்தொடரில் வளர்க்கப்படும் பெயர் பெற்ற இரகமாகும்.
- மிகவும் உயரமாக வயரும் தன்மை கொண்டதினால் சாயும் தன்மையும் மற்றும் வளர்ச்சி குறைவாகவும் காணப்படுகின்றது.
- உள்ளூர் சந்தையில் பாசுமதி அரிசியை விட நல்ல விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

54. குள்ளக்கார்



- நோய் எதிர்ப்பு சக்தியுடையது.
- அதிக துத்தநாக சத்து மற்றும் இரும்புச்சத்து உள்ளது.
- இரத்த அழுத்தத்தை சீராக்குகின்றது.
- உடலுக்கு புத்துணர்வும், அதிக வலுவும் தரவல்லது.
- இட்லி, தோசை மற்றும் கஞ்சி செய்ய ஏற்றது.
- சிவப்பு நிற அரிசியுடையது.

55. சொர்ணவாரி



- திருவள்ளூர் மாவட்டத்தில் சொர்ணவாரி பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 105-110 நாட்கள்
- பருமனான வெள்ளை அரிசி.
- வறட்சி தாங்கி வளரக்கூடியது.

56. கோணக்குறுவை



- தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை பருவத்தில் பயிரிடப்படுகிறது.
- வயது 120 நாட்கள் ; உயரம் 70 செ.மீ.
- கருப்பு நிற நெல்.
- பருமனான சிவப்பு நிற அரிசி.

57. அடுக்கு நெல்




- வயது 140 நாட்கள்.
- சம்பா பருவம்.
- உயரம்- 125-135 செ.மீ ,சாயும் தன்மை வாய்ந்தது.
- மித பருமனான வெள்ளை நிற அரிசிஆயிரம் மணி எடை- 37 கிராம்.
- மிக அதிக அளவு கொழுப்புச் சத்தும், அதிக அளவு புரதம், இரும்பு, பொட்டாஷியம், பாஸ்பரஸ், துத்தநாகம், மெக்னீஷியம் ஆகிய சத்துக்களை கொண்டது.

58. அம்பே மோஹுர்

- இது மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்தது. மராட்டிய மன்னர்களால் பிரபலமாக சாகுபடி செய்யப்பட்டது .
- வயது 135 நாட்கள் ;சம்பா பருவம்.
- உயரம்- 85-95 செ.மீ,
- சாயும் தன்மை கொண்டது.
- சன்னமான வெள்ளை நிற அரிசி;ஆயிரம் மணிகளின் எடை- 17 கிராம்.
- மிக அதிக அளவு கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்து, அதிக அளவு புரதச்சத்து, கொழுப்புச் சத்து, பொட்டாஷியம், துத்தநாகம், மெக்னீஷியம் ஆகிய சத்துக்களை கொண்டது.
- 



59.கருடன் சம்பா

- வயது 130 நாட்கள்.
- சம்பா பருவம்;உயரம்- 120-135 செ.மீ
- சாயும் தன்மை வாய்ந்தது.
- மித பருமனான வெள்ளை நிற அரிசி;ஆயிரம் மணிகளின் எடை- 26 கிராம்.
- கருடனின் கழுத்தில் காணப்படும் வெள்ளை நிற வளையம் போல் நெல்லின் தோற்றம் இருப்பதால் கருடன் சம்பா எனப்படுகிறது.
- புட்டு மற்றும் தென்னக உணவு வகைகளுக்கு ஏற்றது.
- மிக அதிக அளவு கால்சியம், மெக்னீஷியம் மற்றும் இரும்புச்சத்து, அதிக அளவு புரதச்சத்து, கொழுப்புச் சத்து, பாஸ்பரஸ் பொட்டாஷியம், துத்தநாகம் ஆகிய சத்துக்களை கொண்டது.



### 60.இலுப்பைப்பூ சம்பா

- வயது 120 நாட்கள்
- சம்பா பருவம், உயரம்- 110-120 செ.மீ சாயும் தன்மை வாய்ந்தது.
- கருப்பு நிற நெல், மித பருமனான வெள்ளை நிற அரிசி ;ஆயிரம் மணிகளின்எடை- 19 கிராம்.
- இலுப்பைப்பூவின் வாசனை கொண்டதால் இலுப்பைப்பூ சம்பா எனப்படுகிறது.
- பாயசம் மற்றும் தென்னக உணவு வகைகளுக்கு ஏற்றது.
- அதிக அளவு புரதம், இரும்பு, கொழுப்பு, கால்சியம், துத்தநாகம் ஆகிய சத்துக்களை கொண்டது.
- பூச்சி மற்றும் நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் வாய்ந்தது.
- நீரிழிவு, பக்க வாதம் மற்றும் மூட்டு வலி நிவாரணத்திற்கு பரிந்துரைக்கப்படுகிறது.



### 61.இறவைப்பாண்டி

- வயது 120 நாட்கள்; சம்பா பருவம்.
- உயரம்- 145-165 செ.மீ.
- சாயும் தன்மை வாய்ந்தது.
- மித பருமனான வெள்ளை நிற அரிசி
- ஆயிரம் மணிகளின் எடை- 22 கிராம்.
- தென்னக உணவு வகைகளுக்கு ஏற்றது.
- அதிக அளவு புரதம், இரும்பு, கொழுப்பு, கால்சியம், மெக்னீஷியம், துத்தநாகம் ஆகிய சத்துக்களை கொண்டது.
- வெள்ளத்தை தாங்கி வளரக்கூடியது.



62.காடைக்கழுத்தன்

- வயது 170 நாட்கள் ;சம்பா பருவம்.
- உயரம்- 135-150 செ.மீ.
- சாயும் தன்மை வாய்ந்தது.
- மித பருமனான வெள்ளை நிற அரிசி.
- ஆயிரம் மணிகளின்எடை- 27 கிராம்.
- காடையின் கழுத்தில் காணப்படும் வெள்ளை நிற வளையம் போல் நெல்லின் தோற்றம் இருப்பதால் காடைக்கழுத்தன் எனப்படுகிறது.
- புட்டு மற்றும் தென்னக உணவு வகைகளுக்கு ஏற்றது.
- மிக அதிக அளவு கால்சியம் மற்றும் கொழுப்பு, இரும்பு, புரதம், மெக்னீஷியம், பாஸ்பரஸ், பொட்டாஷியம், துத்தநாகம் ஆகிய சத்துக்களை கொண்டது.
- வடிகால் வசதி உள்ள பகுதிகளுக்கு ஏற்றது.



63.கம்பன் சம்பா

- வயது 140 நாட்கள்;சம்பா பருவம்.
- உயரம்- 110 - 118 செ.மீ
- சாயும் தன்மை வாய்ந்தது.
- மித பருமனான மங்கிய வெள்ளை நிற அரிசி;ஆயிரம் மணிகளின் எடை- 20 கிராம்.
- ஒரு கதிரில் 170 நெல்மணிகள் வரை காணப்படுகிறது.
- மிக அதிக அளவு புரதமும் அதிக அளவு இரும்பு, சுண்ணாம்பு, துத்தநாகம் ஆகிய சத்துக்களும் கொண்டது.
- இந்த இரகத்தின் மகசூலானது 1300 கிலோ நெல் மணிகளும் 1950 கிலோ வைக்கோலும் கொண்டுள்ளது.
- பொங்கல் செய்ய ஏற்ற உணவு.



64.கருங்குறுவை

- வயது 125 நாட்கள்;நவரை மற்றும் குறுவை பருவம்.
- உயரம் - 95 - 101 செ.மீ. சாயும் தன்மை வாய்ந்தது.பருமனான கறுப்பு நெல்மணிகள் கொண்டது. பழுப்பு நிற அரிசி.
- ஆயிரம் மணிகளின் எடை- 25.5 கிராம்.
- ஒரு கதிரில் 85 நெல்மணிகள் கொண்டது.
- அதிக அளவு இரும்பு, சுண்ணாம்பு, துத்தநாகம், மணிச்சத்து ஆகிய சத்துக்களை கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 825 கிலோ மற்றும் 1200 கிலோ வைக்கோலும் கிடைக்கவல்லது.
- இந்த இரகத்தின் சிறப்பியல்பானதுஆயுர்வேத மருத்துவர்களால் யானைக்கால் நோய்க்கு மருந்தாக பரிந்துரைக்கப்படுகிறது.
- இட்லி மற்றும் தோசை உணவு வகைகளுக்கு ஏற்றது. இந்த இரகத்தில் வெள்ளை பொன்னி அரிசியை காட்டிலும் சர்க்கரை உயர்த்தல் (GI) குறியீடுடானது 50-55ஆக குறைந்து காணப்படுகிறது.



65.கொத்தமல்லி சம்பா

- வயது 135 நாட்கள்;சம்பா பருவம்.
- உயரம்- 108 - 117 செ.மீ.
- சாயும் தன்மை வாய்ந்தது.
- மித பருமனான மங்கிய வெள்ளை நிற அரிசி;ஆயிரம் மணிகளின்எடை- 32 கிராம்.
- ஒரு கதிரில் 130-135 நெல்மணிகள் காணப்படுகிறது.
- நெல்மணிகளானது கொத்தமல்லி விதைகளைக்போன்று உள்ளதால் இதனை கொத்தமல்லி சம்பா என்று அழைக்கப்படுகிறது.
- மிக அதிக அளவு புரதம் மற்றும் கொழுப்பு, இரும்பு, சுண்ணாம்பு, துத்தநாகம், மணிச்சத்து ஆகிய சத்துக்களையும் கொண்டது. இந்த இரகத்தின் தானிய மகசூலானது 1000 கிலோ மற்றும் 1900 கிலோ வைக்கோலும் கிடைக்கிறது



66.கொட்டாரச் சம்பா

- வயது 130 நாட்கள்.
- சம்பா பருவம்.
- உயரம் - 124 - 140 செ.மீ.
- சாயும் தன்மை வாய்ந்தது.
- பருமனான சிவப்பு நிற கொண்ட நெல் மணிகள் ; ஆயிரம் மணிகளின் எடை- 22 கிராம். மிக அதிக அளவுகொழுப்புச் சத்து உள்ளது. சாம்பல் மற்றும் புரதம் அதிக அளவு உள்ளது. அதிக இரும்பு, மெக்னீசியம் துத்தநாகச்சத்து கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 700 கிலோ மற்றும் 1300 கிலோவைக்கோலும் கிடைக்கவல்லது.



67.குடைவாழை

- வயது 130 நாட்கள்.
- பின் சம்பா பருவம்
- உயரம் - 135 -152 செ.மீ. சாயும் தன்மை வாய்ந்தது. பருமனான பழுப்பு நிற கொண்ட நெல் மணிகள், அரிசி சிவப்பு நிறம் கொண்டது ; ஆயிரம் மணிகளின் எடை - 32 கிராம்.ஒரு கதிரில் 230 கிராம் நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு சாம்பல் மற்றும் புரதச் சத்து உள்ளது. அதிக அளவு கொழுப்புச் சத்து, இரும்பு, சாம்பல் சத்து மெக்னீசியம் மற்றும் மணிச்சத்து, துத்தநாகச்சத்து ஆகிய தாதுக்களைக் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 1600 கிலோ நெல் மணிகளும் 1800 கிலோ வைக்கோலும் கொண்டுள்ளது.
- இந்த இரகத்தில் சர்க்கரை உயர்த்தல் (GI) குறியீடு குறைவாக காணப்படுகிறது.
- இதன் வைக்கோல் கூரை வேய்ப்பதற்கு ஏற்றது.



68.மொழிகருப்பு சம்பா

- வயது 120 நாட்கள்.
- சம்பா பருவம்.
- உயரம்- 125 -135 செ.மீ. சாயும் தன்மை வாய்ந்தது.
- பருமனான சிவப்பு நிற கொண்ட நெல் மணிகள்; ஆயிரம் மணிகளின்எடை - 36 கிராம்.
- ஒரு கதிரில் 220 நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு சாம்பல், புரதம் உள்ளது. அதிக அளவு இரும்பு மற்றும் துத்தநாகச்சத்துக்களைக் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 600 கிலோ மற்றும் 1600 கிலோ வைக்கோலும் கிடைக்கிறது.



69. முல்லன் கைமா

- வயது 150 நாட்கள்.
- சம்பா பருவம்.
- உயரம் - 80 -105 செ.மீ
- சாயும் தன்மை வாய்ந்தது.
- சன்னமான வெள்ளை அரிசி;
- ஆயிரம் மணிகளின்எடை - 36 கிராம்.
- ஒரு கதிரில் 220 நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு சாம்பல் மற்றும் கொழுப்பு சத்து உள்ளது.இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்துக்களையும் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 600 கிலோ மற்றும் 1600 கிலோ வைக்கோலும் கொண்டுள்ளது.
- பிரியாணி மற்றும் பாயாசம் செய்வதற்கு ஏற்றது.



70. நவரா

- வயது 90 நாட்கள் ;நவரை பருவம்.
- உயரம் 108 - 115 செ.மீ.
- சாயும் தன்மை வாய்ந்தது.
- நடுத்தர சிவப்பு நிற கொண்ட அரிசி; ஆயிரம் மணிகளின்எடை - 39 கிராம்.
- ஒரு கதிரில் 110 நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு புரதம் மற்றும் கொழுப்பு சத்து உள்ளது. சாம்பல் மற்றும் கந்தகச்சத்துக்களைக் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 700 கிலோ மற்றும் 1087 கிலோ வைக்கோலும் கொண்டுள்ளது.
- சமையலுக்கு மற்றும் குழந்தைகளுக்கு ஏற்ற உணவாகும்.



71. ஒட்டடை

- வயது 150 நாட்கள்
- சம்பா பருவம், தஞ்சை மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது.
- உயரம் - 128 -153 செ.மீ
- சாயும் தன்மை வாய்ந்தது.
- பருமனான சிவப்பு நிற கொண்ட நெல். மணிகள்; ஆயிரம் மணிகளின் எடை 41.0 கிராம்.
- ஒரு கதிரில் 147 நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு சாம்பல், கொழுப்பு மற்றும் புரதம் சத்து உள்ளது. அதிக அளவு இரும்பு, துத்தநாகம் சாம்பல் கந்தகம் மற்றும் மணிச்சத்துக்களைக் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 1000 கிலோ மற்றும் 1800 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.



72. பூவன் சம்பா

- வயது 145 நாட்கள்;நவரை பருவம்.
- உயரம் - 125 -136 செ.மீ.
- சாயும் தன்மை வாய்ந்தது.
- பருமனான சிவப்பு நிற அரிசி; ஆயிரம் மணி எடை - 30 கிராம்.
- ஒரு கதிரில் 128நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு புரதம் மற்றும் கொழுப்பு சத்து உள்ளது. அதிக அளவு சாம்பல் மற்றும் கந்தகச்சத்துக்களும் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 1400 கிலோ மற்றும் 2200 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.
- சமையலுக்கும் தின்பண்டங்களான முறுக்கு செய்ய ஏற்றது.



73. சன்ன சம்பா

- வயது 140 நாட்கள்.
- சம்பா பருவம்உயரம் 144 -155 செ.மீ. சாயும் தன்மை வாய்ந்தது.
- மெல்லிய வெளிர் மஞ்சள் நிற நெல் மணிகள், பழுப்பு நிற அரிசி.
- ஆயிரம் மணிகளின் எடை - 27 கிராம்.
- ஒரு கதிரில் 260நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு சாம்பல், கொழுப்பு மற்றும் புரதம் சத்து உள்ளது. அதிக அளவு இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்துக்களைக் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 1300 கிலோ மற்றும் 2100 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.



74. சிவப்பு குருவிக்கார்

- வயது 125 நாட்கள்;சம்பா பருவம்.
- உயரம் - 112 -127 செ.மீ .
- சாயும் தன்மை வாய்ந்தது.
- பருமனான மஞ்சள் நிற நெல் மணிகள், பழுப்பு நிற அரிசி.
- ஆயிரம் மணிகளின் எடை - 34 கிராம்.
- ஒரு கதிரில் 120 நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு சாம்பல் மற்றும் கொழுப்பு சத்து உள்ளது. அதிக அளவு மணிச்சத்து சாம்பல், சுண்ணாம்பு மற்றும் துத்தநாகச் சத்துக்களையும் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 1050 கிலோ மற்றும் 1600 கிலோ வைக்கோலும் கிடைக்கிறது.



75. தேங்காய்ப்பூ சம்பா

- வயது 120 நாட்கள் ;சம்பா பருவம்.
- உயரம் - 122 - 140 செ.மீ.
- சாயும் தன்மை வாய்ந்தது.
- சன்னமான வெள்ளை நிற அரிசி; ஆயிரம் மணிகளின் எடை - 24 கிராம்.
- ஒரு கதிரில் 140 நெல்மணிகள் கொண்டது.
- வேகவைத்த தேங்காய்பூ சம்பா அரிசியானது மிக அதிக அளவு கொழுப்பு மற்றும் புரதம் சத்து உள்ளது. அதிக அளவு இரும்பு மற்றும் துத்தநாகச்சத்துக்களைக் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 950 கிலோ மற்றும் 1600 கிலோ வைக்கோலும் கிடைக்கும்.
- இந்த இரகமானது கலவை சாதம் மற்றும் புலாவ் செய்வதற்கு ஏற்றது.



76. வெளியன்

- வயது 175 நாட்கள்;சம்பா பருவம்.
- உயரம் - 89 - 100 செ.மீ. சாயும் தன்மை வாய்ந்தது.
- சன்னமான வெள்ளை நிறஅரிசி; ஆயிரம் மணிகளின் எடை - 21 கிராம்.
- ஒரு கதிரில் 81 நெல்மணிகள் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 600 கிலோ மற்றும் 1100 கிலோ வைக்கோலும் கொண்டுள்ளது.



77. வெள்ளை மிளகு சம்பா

- வயது 165 நாட்கள் ;சம்பா பருவம்.
- உயரம் - 108 - 115 செ.மீ
- சாயும் தன்மை வாய்ந்தது.
- சன்னமான வெள்ளை நிறஅரிசி.
- ஆயிரம் மணி எடை - 21 கிராம்.
- ஒரு கதிரில் 200 நெல்மணிகள் கொண்டது.
- மிக அதிக அளவு கொழுப்பு சத்து அதிக அளவு இரும்பு மற்றும் துத்தநாகச் சத்துக்களைகளையும் கொண்டது.
- இந்த இரகத்தின் தானிய மகசூலானது 1300 கிலோ மற்றும் 1900 கிலோ வைக்கோலும் கிடைக்கவல்லது.



78.சொர்ணமசூரி

- சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு ஏற்றது
- வயது 120-130 நாட்கள்
- மகசூல் 2200-2400 கிலோ கிடைக்க வல்லது
- புரதம் 6-8 கிராம் வரை அடங்கியுள்ளது
- இதனுடைய பழைய சாதம் , நீராகாரமும் மிகுந்த சுவையுடையாதாக இருக்கும்
- பழைய சாதம் 3 நாட்களானாலும் வீணாவதில்லை
- பிரியாணி செய்வதற்கு ஏற்றது.



79.கலியன் சம்பா

- வயது 150-155 நாட்கள், உயரம் 160-168 செ.மீ
- பள்ளமான இடங்களில் பயிரிடவும், வெள்ளம் வந்தாலும் தாங்கி வளரக்கூடியது
- தொடர்ந்து இந்த அரிசியை கஞ்சி வைத்து குடித்து வந்தால் உள் உறுப்புகளில் உள்ள ஆராத புண்களும் ஆறும்.
- புற்று நோய் வந்தவர்களுக்கு உடல் வலுவை கொடுக்கக்கூடியது.
- புரதம் 11 கிராம் , இருப்பு , துத்தநாகம் சத்துக்களை கொண்டது.
- குறைந்த கிளைசிமிக் இன்டெக்ஸ் கொண்டது (49-52).



80.மைசூர் மல்லி

- வயது 120-130 நாட்கள், உயரம் 73 செ.மீ
- சாதம் வடித்த கஞ்சி சத்து மிகுந்ததாக இருப்பதால் யாரும் வீணாக்குவதில்லை
- பழைய சாதத்தின் நீராகாரம் மிகுந்த சுவையுடையதாக இருக்கும்
- எளிதில் ஜீரணம் ஆகக்கூடியது.
- குழந்தைகளுக்கு உணவளிக்க ஏற்ற இரகம்



81.சிங்கினி கார்

- அவல் , பொறி செய்ய ஏற்றது
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளது.
- தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் ஆரோக்கியம் மேம்படும்.
- நோயாளிகள் கஞ்சி வைத்து தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் உடல் நலம் தேறி வரும்.



82.சிகப்பு கவுனி



- வயது 150-160 நாட்கள், உயரம் 160-165 செ.மீ
- சாயாத தன்மை கொண்டது
- ஒரு நெல் மணி ஒரு செ.மீ நீளம் கொண்டது
- ஏக்கருக்கு 1800 கிலோ மகசூல் மற்றும் 1200 கிலோ வைக்கோல் தரவல்லது.
- நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது.
- இரும்பு , துத்தநாகம், கால்சியம், பாஸ்பரஸ் சத்துக்கள் கொண்டது. நார்ச்சத்து அதிகமுள்ளது.
- அதிகம் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது

83.இராஜமுடி அரிசி



- வயது 140-150 நாட்கள், உயரம் 180 செ.மீ
- மைசூர் மன்னர்களால் சாப்பிடப்பட்ட சத்துள்ள அரிசி
- நார்சத்து அதிகம் உள்ளது
- இரும்பு, துத்தநாகம் மற்றும் மாங்கனீசு சத்து நிறைந்தது
- ஆன்டி ஆக்ஸிடன்ட் நிறைந்துள்ளது.
- சிகப்பு மற்றும் செம்பழுப்பு நிறமுடைய அரிசி
- இந்த அரிசி கஞ்சியை நோய்வாய் பட்டவர்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர எளிதில் குணமடைவாரடகள்.
- தொடர்ந்து சாப்பிடுவதால் உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேறும்.

84.இரத்த சாலி



- வயது 110 நாட்கள், உயரம் 230 செ.மீ
- இதை தொடர்ந்து சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சகதி அதிகரிக்கிறது.
- இரத்த சிகப்பில் அரிசி இருப்பதால் இதற்கு இரத்த சாலி என்று பெயர் பெற்றது.
- இந்த அரிசி சாப்பிடுவதால் இரத்த சுழற்சிக்கும், சுத்திகரிப்பதற்கும் உதவியாக இருக்கிறது.
- பித்தம் கபம் வாதம் இவை மூன்றையும் சமன்படுத்தும் தன்மை கொண்டது.

85.மணிச்சம்பா




- வயது 140-160 நாட்கள், உயரம் 81 செ.மீ
- உருண்டை வடிவ அரிசி
- தொடர்ந்து சாப்பிட்டு வர இரத்த சோகை சரியாகும்
- நீரிழிவு நோயளிக்கு மிகவும் ஏற்றது.
- செரிமானத்தை சரிசெய்கிறது
- உடலை சுத்திகரிக்கும் தன்மை கொண்டது

86.அன்னமழகி



- வயது 140 நாட்கள், உயரம் 135 செ.மீ
- பித்தத்தையும் உடல் சூட்டையும் குறைக்ககூடியது
- இனிப்பு சுவையுடைய அரிசி
- சகல சுரங்களையும் பித்தத்தையும் போக்கக்கூடியது
- இதன் பழைய சாதம் சாப்பிட்டு வர ஆண்மை அதிகரிக்கும்

87.துளசி வாசனை சீரக சம்பா



- வயது 130-140 நாட்கள், உயரம் 81 செ.மீ
- அதிக நோய் எதிர்ப்பு தன்மை கொண்டது.
- செலினியம் மற்றும் அதிக அளவில் ஆன்டி ஆக்ஸிடென்ட் நிறைந்தது
- சமையல் செய்யும் போது அந்த வீடு முழுவதும் துளசி வாசனை வரக்கூடியது

88.கைவர சம்பா



- வயது 135 நாட்கள், உயரம் 150 செ.மீ
- மழை வெள்ளத்தை தாங்கி வளரக்கூடியது
- நீரிழிவு மற்றும் குடல் சார்ந்த நோய்களை சரிசெய்யக்கூடியது
- இதய நோய்களை சரிசெய்யக்கூடியதாக கருதப்படுகிறது
- இட்லி , தோசை மற்றும் இடியாப்பம் போன்ற சிற்றுண்டிகள் செய்ய ஏற்றது
- இது கைக்குத்தல் அரிசி மற்றும் அவல் செய்ய ஏற்றது.
- சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு எற்றது

89.பிச்சாவரி

- நாகை மாவட்டத்தில் வெள்ளப்பாலம் மற்றும் கீழ்வேளூர் பகுதிகளில் தாளடி பருவத்தில் வெள்ளம் மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.
- வயது 110 -115 நாட்கள்.
- நேரடி விதைப்பு மற்றும் நடவு முறைக்கும் ஏற்றது.

90.மார நெல்

- கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பகுதிகளில் பின்சம்பா மற்றும் நவரைப் பருவத்தில் பயிரிடப்படுகின்றது.
- வயது 120- 125 நாட்கள்
- பருமனான சிவப்பு நிற அரிசியுடையது.
- உறுதியான விதைஉறையையுடையதால் அறுவடை சமயத்தில் அதிக மழை பெய்யும்போது முளைக்காத தன்மையுடையது.

91.இராமநாதபுரம் பூங்கார்

- இராமநாதபுரம் மாவட்டம் ரகுநாதபுரம் பகுதிகளில் புரட்டாசி மற்றும் கார்த்திகை பட்டத்தில் பயிரிடப்படுகிறது. கடலோர மணற் பாங்கான இடங்களில் வறட்சியைத் தாங்கி உயரமாக வளரக்கூடியது.
- வயது 100 -110 நாட்கள்.
- சிவப்பு நிற அரிசியுடையது.

92. கச்ச வாழை

- வயது 135 நாட்கள், உயரம் - 120 செ.மீ.
- பருமனான சிவப்பு நிற அரிசி.

93. வீதி விடங்கன்

- சம்பா பருவத்திற்கு ஏற்றது.
- மணல் கலந்த களிமண் நிலங்களில் நன்கு வளரும்.
- இட்லி, தோசை போன்ற உணவு வகைகளுக்கு உகந்தது.
- வயது 130 நாட்களள; உயரம் 145 செ.மீ
- பருமனான சிவப்பு நிற அரிசி.

94.கூம்பாளை

- சம்பா பருவத்தில் கடலோர பகுதிகளில் பயிரிடப்படும் இரகம்.
- மணல் கலந்த களிமண் நிலங்களுக்கு உகந்தது.
- மருத்துவ குணம் நிறைந்தது. பிரசவ வலியைக் குறைக்கும் ஆற்றல் வாய்ந்தது.
- அரிசியை அரைத்து பாலெடுத்து அதனுடன் வெல்லம் சேர்த்து உட்கொண்டால் அசதி மற்றும் உடல் வலியைப் போக்கும்.
- உயரம் 120-165 செ.மீ வளரக்கூடியது

* வைக்கோல் கூரை வேய பயன்படுத்தப்படுகிறது.
* வயது 130 நாட்கள்;பருமனான பழுப்பு நிற அரிசி.
* இட்லி, தோசை போன்ற உணவு செய்ய ஏற்றது.

95.குருவாளை

* காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் குறுவை பருவங்களில் பயிரிடப்படுகிறது.
* வயது 120-125 நாட்கள் ; பின் சம்பா பருவத்திற்கு ஏற்றது.
* நாற்று நடவுக்கு ஏற்றது.
* பருமனான சிவப்பு நிற அரிசி
* இட்லி, தோசை போன்ற உணவு வகைகள் செய்ய ஏற்றது.
* நீர் தேங்கும் பகுதிகளுக்கு ஏற்ற இரகம்.
* குறுகிய கால நெல் இரகம் என்பதினால் ஒரு வருடத்தில் மூன்று பருவங்களிலும் அறுவடை செய்யலாம்.

96.கூன்வாளை

* காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுக்கன் கொள்ளை கிராமத்தில் சம்பா பருவங்களில் பயிரிடப்படுகிறது.
* வயது 128-130 நாட்கள்; சம்பா பருவத்திற்கு ஏற்றது.
* நேரடி விதைப்பு மற்றும் நாற்று நடவுக்கு ஏற்றது.
* பருமனான பழுப்பு நிறமுடைய அரிசியுடையது.
* வைக்கோல் கூரை வேய பயன்படுத்தப்படுகிறது.
* நீர் தேங்கும் பகுதிகளுக்கு ஏற்ற இரகம்.

97.உவர்முண்டான்

* சம்பா பருவத்திற்கு ஏற்றது
* வயது 155-160 நாட்கள்
* நீர் தேங்கும் இடங்களிலும் நன்கு வளரக்கூடியது
* மகசூல் 1000 கிலோவும், வைக்கோல் 1300 கிலோவும் கிடைக்கும்.
* உவர் தன்மையுள்ள மண் வகைகளிலும் , கடலோர உவர் நிலங்களிலும் முன்னோர்களால் பயிரிடப்பட்டது
* தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நோய் எதிர்ப்பு சக்தி கூடும்.
* பலவீனப்பட்ட உடலும் பலமாகும்.

நாட்டு இரகங்களில் தனித்தேர்வு மற்றும் ஒட்டுச் சேர்க்கை மூலம் கிடைத்த புதிய நெல் இரகங்கள்

| நாட்டு இரகங்கள் | கிடைத்த புதிய நெல் இரகங்கள் |
|---|---|
| தனித்தேர்வு (Pureline Selection) | |
| ஆடுதுறை(ஏடிடி) | |
| சிவப்பு சிறுமணி | ஆடுதுறை 1 |
| வெள்ளை சிறுமணி | ஆடுதுறை 2 |
| குறுவை | ஆடுதுறை 3, ஆடுதுறை 4 |
| நெல்லூர் சம்பா | ஆடுதுறை 5 |
| சிவப்பு ஒட்டடன் | ஆடுதுறை 6 |
| வெள்ளை ஒட்டடன் | ஆடுதுறை 7 |
| பூங்கார் | ஆடுதுறை 9 |
| குரங்கு சம்பா | ஆடுதுறை 10 |
| சித்திரைக்காலி | ஆடுதுறை 12 |
| சன்னச்சம்பா | ஆடுதுறை 13 |
| வெள்ளைக்கார் | ஆடுதுறை 14 |
| செங்குறுவை | ஆடுதுறை 15 |
| கோணக்குறுவை | ஆடுதுறை 16 |
| முத்துச்சம்பா | ஆடுதுறை 17 |
| வெள்ளை குறுவை | ஆடுதுறை 18 |
| சாரப்பல்லி | ஆடுதுறை 19 |
| தஞ்சாவூர் வாடன் சம்பா | ஆடுதுறை 21 |
| வடஆற்காடு வாடன் சம்பா | ஆடுதுறை 22 |
| குள்ளங்கார் | ஆடுதுறை 23 |
| பூண் சம்பா | ஆடுதுறை 24 |
| மொட்டைக்குறுவை | ஆடுதுறை 26 |
| கோயம்புத்தூர்(கோ) | |
| பெரியகிச்சலி | கோயம்புத்தூர் 1 |
| பூம்பாளை | கோயம்புத்தூர் 2 |
| வெள்ளைச்சம்பா | கோயம்புத்தூர் 3 |
| ஆனைக்கொம்பன் | கோயம்புத்தூர் 4 மற்றும் 8 |

| | |
|---|---|
| சன்னச்சம்பா | கோயம்புத்தூர் 5 |
| சடைச்சம்பா | கோயம்புத்தூர் 6 மற்றும் 7 |
| கார்சம்பா சிவப்பு | கோயம்புத்தூர் 9 |
| கோபிக்கார் | கோயம்புத்தூர் 10 |
| அய்யன் சம்பா | கோயம்புத்தூர் 11 |
| செந்தி நாயகம் | கோயம்புத்தூர் 12 |
| அறுபதாம் கோடை | கோயம்புத்தூர் 13 |
| சின்ன வாடன் சம்பா | கோயம்புத்தூர் 17 |
| வெள்ளைக்கார் | கோயம்புத்தூர் 18 |
| செங்கல்பட்டு சிறுமணி | கோயம்புத்தூர் 19 |
| தெல்ல சின்ன வட்லு | கோயம்புத்தூர் 20 |
| அறுபதாம் சம்பா | கோயம்புத்தூர் 21 |
| மானாவாரி | கோயம்புத்தூர் 22 |
| இரங்கூன் சம்பா | கோயம்புத்தூர் 23 |
| புதுப்பட்டி சம்பா | கோயம்புத்தூர் 27 |
| பங்காருதீகலு | கோயம்புத்தூர் 28 |
| திருச்செங்கோடு சம்பா | கோயம்புத்தூர் 32 |
| தலைஞாயர் (டிஎன் ஆர்) | |
| திருத்துறைப்பூண்டி கார் | திருத்துறைப்பூண்டி 1 |
| காட்டுயாணம் | திருத்துறைப்பூண்டி 2 |
| பாலூர் (பிஎல் ஆர்) | |
| கருடன் சம்பா | பாலூர் 1 |
| சித்திரைக்காலி | பாலூர் 2 |
| அம்பாசமுத்திரம் (ஏஎஸ்டி) | |
| கார் சம்பா (சிவப்பு) | அம்பை 1 |
| கார் சம்பா (வெள்ளை) | அம்பை 2 |
| வீதி வடங்கன் | அம்பை 3 |
| குறுவைக்கலையான் | அம்பை 4 |
| கார்த்திகைச்சம்பா | அம்பை 5 |
| ஆனைக்கொம்பன் | அம்பை 6 |

| | |
|---|---|
| தூய மல்லி | அம்பை 8 |
| அவசரச்சம்பா | அம்பை 9 |
| சோள வாலை | அம்பை 10 |
| அரிவிக் கிரிவி | அம்பை 13 |
| திரூர்குப்பம் (டிகேஎம்)<br>பிசினி | <br>திரூர்குப்பம் 1 |
| செம்பாளை | திரூர்குப்பம் 2 |
| சொர்ணவாரி | திரூர்குப்பம் 3 |
| ஏர்ரசன்ன வாடலு | திரூர்குப்பம் 4 |
| மணக்கட்டை | திரூர்குப்பம் 5 |
| குள்ளக்கார் | திரூர்குப்பம் 7 |

| நாட்டு இரகங்கள் | உருவாக்கப்பட்ட புதிய நெல் இரகங்கள் |
|---|---|
| ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்ட இரகங்கள் (Hybridization) | |
| மோலகொலுக்குலு / ஏடிடீ 2 | ஆடுதுறை 8 (ஏடிடீ 8) |
| ஐ ஆர் 8 /கட்டிச்சம்பா | திருப்பதிசாரம் 1 (டிபிஎஸ் 1) |
| ஐ ஆர் 8 /சித்திரைக்கார் | மதுரை 1(எம்டியு 1) |
| டிகேஎம் 7 (குள்ளக்கார்) / ஐ ஆர் 8 | திரூர்குப்பம் 9 (டிகேஎம் 9) |
| ஏடிடீ 43 / சீரக சம்பா | வைகைசீரக சம்பா 1 (விஜிடி 1) |
| கோ 50 / கருப்புக் கவுனி | மேம்படுத்தப்பட்ட கவுனி (கோ 57) |
| ஏஎஸ்டி 16 / மஞ்சள் சரடை | அம்பை 21 (ஏஎஸ்டி 16) |
| இயற்கை சடுதி மாற்றம் (Naturalmutant ) | |
| கிச்சலி சம்பா (கோணமணி) | ஜிஇபி 24 |








வேளாண் தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,

ஹைதராபாத்

விரிவாக்க கல்வி இயக்ககம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்